# SCHEME OF EVALUATION OFF II PUC

## SUPPLIMENTARY 2022

## Subject Code – 04

## Tamil

### பகுதி - ஒன்று

**அ. எவையேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் ஓரிரு வரிகளில் விடை எழுதுக** **10x1=10**

1. இறைவன்
2. வெள்ளிவீதியார்
3. கைமாறு கருதாதவன்
4. மூச்சு காற்று சூடுபட்டால்
5. குளிர் நிழல்
6. அமுதத்திற்கு
7. இரண்டு
8. மனதிற்கு ஒவ்வாத இரைச்சல்
9. எண், எழுத்து
10. புல்லாங்குழல், நாதசுரம், தாரை, கொம்பு
11. குப்புசாமி
12. குருமூர்த்தி
13. கோபம்
14. பிரெட், பண்ணு
15. காட்டு ராஜா

### பகுதி - இரண்டு

**அ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக** **4x2=8**

16. நம்மிடம் உள்ள பொருள், புகழ்
17. நாரை தன் ஊருக்கு வந்து கெளிற்று மீனை உண்டு விட்டு செல்வதுபோல் தன் கணவன் தன்னை கைவிட்டுத் தவிக்க விட்டதுபோல இருக்கிறது.
18. ஆசிரியர் இல்லாத ஊர். மூத்தோர் இல்லாத அவைக்களம். பகிர்ந்து உண்ணாத குடிப்பிறப்பு
19. கறைகள் இல்லாத வைகறைகள், ஆதரவில்லாத அபலைகள் மீது அக்கறை கொண்ட வைகறைகள்.

20. மரம் மண்ணில் வேரூன்றி கிளைகளைப் பரப்பிக் கொண்டுள்ளது. மேலும், பூவும், பிஞ்சும், காயும், கனியுமாகி குடும்பத்துடன் தலைநிமிர்த்து நிற்கிறது.
21. ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்று. சமண கடவுளாகிய முதலும் முடிவும் இல்லா அருக தேவனை மூவுலகத்தோரும் தேர்களும் வாழ்த்துகின்றனர்.

**ஆ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக** 3x2=6

22. ஆண் பெண் உள்ளத்தில் வெளிவரும் ஊற்று. சந்தர்ப்பத்திலும் நிர்பந்தத்திலும் கலந்துவரும் பருவத்தின் உந்துதல்.
23. கணினி மூலமாக சாலையில் அமைந்துள்ள மேடுபள்ளங்களின் தன்மை, போக்குவரத்து நெரிசல், வானிலை மாற்றங்களால் இரைச்சலை குறைக்கலாம்.
24. எல்லையற்ற அனுபவக்கூடம், பார்த்துப் பார்த்துப் பட்டுத் தேறி, மாசு மறுவுகள் அற்றுப் பக்குவம் பழகும் பள்ளிச்சாலை
25. நேர்கோடு, வளைந்த கோடு, கோணக்கோடு இவற்றால் சிவப்பு மஞ்சள் நீலம் முதலிய நிறங்களில் ஓவியங்கள் வரையப்படுகின்றன.
26. பால்போளி, பால்கோவா அல்லது குல் குல் பசந்த்

**இ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் இரண்டு அல்லது மூன்று வரிகளில் விடை எழுதுக** 3x2=6

27. ஐந்தரை அடி உயரம், குளிரை தடுக்க கம்பளி கோட்டு, கால்சட்டை கழுத்துப்பட்டி அணிந்து எடுப்பாக இருந்தார்.
28. பெருமை பேச்சு, முதலாளி பெரிய மனிதரானதற்கு நான்தான் காரணம் என்று சொன்னது
29. பச்சிலைக்கட்டு, இலை இடிக்கும் கல்லுரல், மருந்து அரைக்கும் கலுவம்
30. படம் ரிலீசு ஆனது. தலைவர் படம். கடைக்கெல்லாம் போகமுடியாது
31. செவலை நிறத்தில் காட்டு ராஜா என்ற நாய். அந்நாய் புதரில் அசையும் அசைவை கண்டு குரைத்தல், சில நேரத்தில் முயலைப் பிடித்து வந்து தரும்.

## பகுதி - மூன்று

**அ. எவையேனும் இரண்டிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக** 2x3=6

32. இடம் : இறைவாழ்த்து, நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை
பொருள் : கல்லாதவர் மனதில் இருப்பவர்
விளக்கம் : எல்லா உயிர்களிலும் கருணை வடிவில் இருப்பவர் கடவுள்

33. இடம் : ஐங்குறுநூறு, அம்மூவனார்

பொருள்: மான்கள் தாகத்திற்காக தண்ணீர் குடிக்கிறது

விளக்கம் : பொருள் தேடச் சென்ற தலைவன் நாட்டில் தண்ணீர் சுவையாக உள்ளது. எஞ்சிய நீரை மான்கள் குடிக்கிறது.

34. இடம்: திருக்குறள், திருவள்ளுவர்

பொருள்: மனிதன் கொண்ட ஊக்கத்தின் அளவை குறிக்கும்.

விளக்கம் : முயற்சியுடன் மனதில் தளர்வில்லாமல் செய்யும் செயல் ஊக்கத்தின் உயர்வுக்கு வழிவகுக்கும்

35. இடம்: பழையவீடு, கவிஞர் அப்துல் ரகுமான்

பொருள்: குளியல் அறைக்கு கதவில்லை

விளக்கம்: பழையவீடு எப்படி இருந்தால் என்ன அதற்கு ஏற்றார் போல் வாழ்வது நலம்.

36. இடம்: சீவக சிந்தாமணி, திருத்தக்க தேவர்

பொருள்: தேவர்களுக்கெல்லாம் தேவன்

விளக்கம் : அருக தேவனைப் போற்றும்போது தேவர்களுக்கு எல்லாம் தேவனாக விளங்குபவன்.

**ஆ. எவையேனும் ஒன்றிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக 1x3=3**

37. இடம்: கவிதை கிழக்கும் மேற்கும், க.ப.அறவாணன்

பொருள்: நல்ல கவிதைகள் என்றும் சாவதில்லை.

விளக்கம் : கவிஞன் இறந்தாலும் அவர்கள் எழுதிய நல்ல கவிதைகள் உலகம் வாழும்வரை போற்றும்.

38. இடம்: பெண் கல்வி, ப.ஜீவானந்தம்

பொருள்: ஷேக்ஸ்பியர் ஒரு காலத்திற்கு மட்டும் உரியவன் அல்ல.

விளக்கம் : பென் ஜான்சன் என்ற ஆங்கில அறிஞன் ஷேக்ஸ்பியரைப் பற்றி புகழ்ந்து கூறிய வார்த்தை.

39. இடம்: கர்நாடகத்தில் பக்தி இயக்கம், சிவலிங்கம்

பொருள்: நமது உடம்பே கோயில் செய்யும் செயலே கைலாசம்

விளக்கம் : இரங்கநாத் கண்ட்டனகுண்டே அவர்கள் எழுதிய பாடலில் சொல்லப்பட்ட கருத்து

**இ. எவையேனும் ஒன்றிற்கு இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக 1x3=3**

40. இடம்: யோஷிகி, தி.ஜானகிராமன்

பொருள் : நீங்கள் ஜப்பானுக்கு வந்தது. இந்த புத்தகத்தை உங்களுக்கு கொடுத்தது.

விளக்கம் :யோக நிலை என்றால் மனதை சமநிலையில் வைத்துகொள்வது. துன்பம் வந்தால் சோர்ந்து மடிவதோ கூடாது.

41. இடம் : சுயநலம், விந்தன்

பொருள் : வெட்கத்தின் சூட்சமத்தை எடுத்து சொல்வது

விளக்கம் : முதலாளி கூறும் தந்திரத்தால் முருகாயி வெட்கத்தால் நடத்தும் செயலை சொல்வது.

42. இடம் : மாத்திரை, ஆண்டாள் பிரியதர்ஷினி

பொருள் : மாத்திரை என்றால் சிரிப்பும் ஒரு வித மாத்திரைதான்

விளக்கம் : குழந்தை கேட்கும் கேள்விக்கு சரசு சிரிப்புடன் எடுத்துசொல்லும் செயலை விளக்குகிறது.

## பகுதி - நான்கு

**அ. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் ஐந்து அல்லது அல்லது வரிகளில் விடை எழுதுக** **3x5=15**

43. உலகத்தில் மூத்தவள், பேச்சற்றலில் சிறந்தவள், காலத்தை வென்றவள், இளஎமையோடு இருப்பவள், சிந்தாமணி குலுங்க, கலப்பகத்தோடு நடனம் புரிபவள்.

44. தலைவன் பிரிந்து வாடும் தலைவி, தலைவி ஊருக்கு வந்திருக்கும் நாரையிடம் பேசும் செய்தியை சொல்வது. மீன் சாபி வந்திருக்கும் நாரையே தலைவனிடம் நான் வருந்துவதை கூறினாயா என்ற ஏக்கத்தை வெளிப்படுத்துவது.

45. உலக மக்களின் இயல்பை ஒப்பு அறிந்து வாழ்தல்.

மழை எப்போதும் கைமாறு கருதாது.

பிறருக்கு உதவி வாழும் ஒப்புரவு போன்ற நற்செயல்களைத் தேவர் உலகில் பெறுதல் அரிதாகும்.

ஒப்புரவை அறிந்து பிறருக்கு உதவுபவனே உயிர்வாழ்வான்.

ஒப்புரவாளன் பெற்ற செல்வம், ஊர் மக்கள் அருந்தும் குளம் போன்று நிறைந்திருக்கும்.

ஒப்புரவாளன் செல்வம் ஊர் நடுவே உள்ள பயன்மரத்தில் பழங்கள் பழுத்த்தைப் போன்றது..

ஒப்புரவைக் கடமையாகக் கொண்டு வாழும் அறிவு உடையர் தம்மிடம் செல்வம் இல்லாத காலத்திலும் உதவிசெய்வர்.

46. கை வளையல்கள் கிணுகிணுங்க கலைமகள் வாசலில் தைமகளும் மைமகளும் தமிழ்க்கோலம் போடுகிறார்கள். அந்த நேரத்தில் கண்ணை இறுக்கிய கட்டவிழ, காதல் என்னும் மொக்கு மலர, பச்சை வளையல்

பளிச்சிட, பொன்னை உருக்கியது போன்று புதிய உதயம் என்னும் பொங்கல் வருகிறது.

47. சின்னஞ் சிறுவர்களே கல்லுடைக்க வந்தீர்களா. உங்க தகப்பன் பெறும் கூலி அரிசி, பருப்பு போன்ற பொருட்கள் வாங்கப் போதவில்லையா. உங்க தாயின் கூலி அம்மியில் வைத்து அரைக்கும் பொருட்கள் வாங்க போதவில்லையா. இளமையில் கல் என்று கூறியவன் யார் கூப்பிடுங்க. இளமையிலையே கல்லை உடைத்து, ஆசைகள் நிறைவேறாமையால் ஏன் மனம் ஏங்குகின்றது.

48. கருணை கடலாக விளங்குபவன். அந்த கடலில் அமுதமாக இருப்பவன். அவ்வமுத்த்தில் சுவை போன்றவன். சுவை யோடு பயன்போன்றவன். சுவை தரும் தனித்த சிறந்த சுகமாக இருப்பவன். பச்சை நிற பவளமலையாக இருப்பவன்.

**ஆ. எவையேனும் இரண்டிற்கு வினாக்களுக்கு மட்டும் ஐந்து அல்லது அல்லது வரிகளில் விடை எழுதுக** **2x5=10**

49. ஒரு வருடத்திற்கு நான்கு பருவங்கள். மனிதன் மனத்திலும் நான்கு பருவங்கள். முப்பதுக்கு முற்பட்டது வாலிபம் - வசந்த காலம். முப்பதுக்கு மேல் கோடைகாலம். 45க்கு மேல் இலையுதிர் காலம். அறுபதுக்கு மேல் மாரிக்காலம்.

50. பழி அஞ்சு, பழி பாவங்களில் இறங்காதே. பழி பாவங்களை ஈட்டாதே. பகுத்து உண். உனது செல்வத்தைப் பலருக்கும் பயன்படும் விதத்தில் பகுத்துக் கொடுத்து அனுபவி. இதனால் சந்ததி வளரும். மக்கள் குலம் தழைத்து ஓங்கும். வாழ்வுக்கு இரண்டு கண்கள் போன்றது.

51. தோல்கருவிகள். இவை மரத்தால் செய்யப்பட்டு தோலால் கட்டப்பட்டவை. பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம் தமருகம், தண்ணுமை, குடமுழக்கு.

துளைக் கருவிகள். இவை மரத்தினாலும் உலோகத்தினாலும் செய்யப்பட்டவை. புல்லாங்குழல், நாதசுரம், மகுடி, தாரை, கொம்பு

நரம்புக் கருவிகள். மரத்தினால் செய்யப்பட்டு நரம்புகள் அல்லது கம்பிகளால் பூட்டப்பட்டவை. யாழ், வீணை தம்புரா, பிடில்

கஞ்சக் கருவிகள். வெண்கலத்தால் செய்யப்படுவது. தாளம், குண்டு தாளம், பிரதம தாளம், ஜாலர்

மிடறு. கழுத்து என்று பொருள். கழுத்திலிருந்து ஒலி எழுப்பிப் படுவது. வாய்ப்பாட்டு.

52. அண்ணாவின் மாப்பிள்ளை படத்திற்கு இராமானுஜம், தனதுமனைவி பாக்கியம், மகள் மைதிலி சென்றனர். திரைப்படம் ஓடிக்கொண்டிருந்த்து. ஒன்னரை ரூபாய் வகுப்பில் கடைசில் உட்கார்ந்திருந்தனர். பின்னால் இரண்டே கால் ரூபாய் வகுப்பில் இருந்த முணுமுணுப்பு எழுந்தது. படம் மறைப்பதாகவும் கொஞ்சம் தலையை தள்ளிக் கொள்ளும்படியும் கேட்டுக் கொள்ளவே. இராமானுஜம் தலையைக் கழற்றி விட்டு வரட்டும் என்று கோபத்துடன் கூறினார். மண்டை பெரிதாக இருக்கிறதே தவிர உள்ளே ஒன்றுமில்லை என்று விடைதர . எக்ஸ்ரே கண்ணால் தன் மண்டை வழியே படம் பாரும் என்று கோபத்துடன் சொல்ல. குப்புசாமி உட்கார்ந்திருந்தான். படம் பார்த்தாலும் உயர்ந்த ரகத்தோடு பார்க்கவேண்டும்.

**இ. எவையேனும் இரண்டிற்கு வினாக்களுக்கு மட்டும் ஐந்து அல்லது அல்லது வரிகளில் விடை எழுதுக** **2x5=10**

53.நீயும் நானும் பணம்போட்டுக் கூட்டாக ஆட்கள் வைத்து வேலை செய்யலாம். நல்ல வேலைப்பாட்டுடன் செய்து, காட்சி அறையில் வைத்து, நம்மைப்போல் யாரும் கட்டில் செய்யக் கூடாது என்ற உத்திரவாதம் வாங்கி கொள்வோம். நிறைய கிளைகளைத் திறப்போம். இலாபத்தில் சரிபாதி.

54. பிணங்களிலிருந்து எழுந்த புகை நடுவை சுடுகாட்டில் திரியும் பெருமானைப்போல் குடிசையைச் சுற்றிலும் தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த புடக் குழிகளில் புகை நடுவே வைத்தியர் சுவாமிகள் நடந்துகொண்டிருந்தார்.

55. சரசு அதிகாலை நான்குமணிக்கு எழுந்து இட்லி அவித்து அம்மியில் சட்நி அரைத்துத் தாளித்து டிபன் பாக்சில் வைப்பாள். சுடச் சுட முருகேசனுக்கு டீ போட்டுக் கொடுப்பாள். கணவன் முருகேசனுக்கு வெந்நீர் தயார் செய்து காலை ஷிப்டுக்கு அனுப்புவாள். பின்னர் பாத்திரம் தேய்த்து, துணி துவைத்து, வீடு வாசல் பெருக்கி, குழந்தையை எழுப்பிப் பள்ளிக்குச் செல்ல தாயார் செய்வாள்.

56. மஞ்சனாத்தி மலைக்குப் பஸ்ஸில் பயணம் போகும்போது அமராவதி பாலத்தைத் தாண்டியவுடன் குமுளியை நோக்கிச் செல்லும் சாலில் வளைவுகள் தொடங்கி விடும். பயணம் செய்யும்போது நெஞ்சடைத்து, உடல் விறைத்துக் கொள்ளும். வளைவின் விளிப்புகளில் கடக்கும்போது உயிர் மேலேறிக் கீழிறங்குவதைப் போல் உடல் நடுங்கிநிற்கும்.

## பகுதி - ஐந்து

**அ. கீழ்க் காணும் பாடலின் பொருளை எழுதி, அணியை விளக்கி எழுதுக** **1x5=5**

57. உவமையணி, கவிஞர் தாம் கூறக் கருதிய கருத்தை நேரடியாகக் கூறாமல் உவம உருபுடன் வேறொருக் கூறித் தாம் கூற வந்த கருத்தை தெளிவு படுத்துதல் உவமை அணி. பாட்டின் விளக்கம்

அல்லது

58. உவமையணி, உவமையணி, கவிஞர் தாம் கூறக் கருதிய கருத்தை நேரடியாகக் கூறாமல் உவம உருபுடன் வேறொருக் கூறித் தாம் கூற வந்த கருத்தை தெளிவு படுத்துதல் உவமை அணி. பாட்டின் விளக்கம்

**ஆ. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக** **4x2=8**

59. சேர்த்தெழுதுக
1. நல்லூர்
2. பொருளுடைமை

60. பிரித்தெழுதுக
1. குற்றம்+இல்லை
2. இடர்+மிகு

61. எதிர்ச்சொல் தருக
1. சிறுமை
2. இருள்

62. வாக்கியத்தில் அமைத்தெழுதுக
1. வணக்கம் அம்மா.
2. அருள் தருவாய் இறைவா.

63.கோடிட்ட இடங்களை நிறப்புக
1. உதித்தார்
2. சிற்பக்கலை

64. தமிழ்ச் சொற்களை அறிக
1. சிற்றுண்டி
2. காவல் நிலையம்

## பகுதி - ஆறு

**அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றிற்கு கட்டுரை வரைக** **1x5=5**

65. தலைப்பு, முன்னுரை, பொருளடக்கம், முடிவுரை அமைப்பில் கட்டுரை இருக்க வேண்டும்
66. தலைப்பு, முன்னுரை, பொருளடக்கம், முடிவுரை அமைப்பில் கட்டுரை இருக்க வேண்டும்
67. தலைப்பு, முன்னுரை, பொருளடக்கம், முடிவுரை அமைப்பில் கட்டுரை இருக்க வேண்டும்

**அ. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்றிற்கு கடிதம் வரைக** **1x5=5**

68. கேள்விக்கேற்ற முறையில் கடித்ததை கட்டமைக்கவேண்டும்
69. கேள்விக்கேற்ற முறையில் கடித்ததை கட்டமைக்கவேண்டும்
70. கேள்விக்கேற்ற முறையில் கடித்ததை கட்டமைக்கவேண்டும்